**நாள் 20.02.2026** **CC 223/2019** **அ.சா. 3**

**பெயர் செல்வக்குமார் த/பெ. பழனிச்சாமி**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி)

(1) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.கையெழுத்து போட்ட ஆவணம் தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா அல்லது கையால் எழுதப்பட்டிருந்ததா என்றால் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையெழுத்து செய்துவிட்டு போலீசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.20 14:29:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்